பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 04 ஒலி 278 ஞாயிறு 18-11-1990 (கார்த்திகை 02) ந. ஆகிர் 29

# இராணுவ நடவடிக்கையால் யாழ் ஆஸ்பத்திரிக்கு 100 கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம்

கடந்த ஜூன் மாதம் முதல் யாழ் நகரில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு 100கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது குறிப்பாக விமானத் தாக்குதல்களால் உருக்குலைந்த நிலையில், இருந்தபெரும்பாலான கட்டிடங்கள் திருத்தப்பட்டு உள்ளன. அத்துடன் இங்குள்ள பெறுமதிவாய்ந்த உபகரணங்கள் சேதமாகியும், திருடப்பட்டும் உள்ளன. இந்த திருத்த வேலைக்கென ஏழு கோடி ரூபாவை சுகாதார அமைச்சு ஒதுக்கியுள்ள போதிலும், இன்னமும் இப்பணம் இங்கு வந்து சேரவில்லை. இதேசமயம் அவசரசிகிச்சைக்குரிய அத்தியாவசிய மருந்துவகைகளான பென்சிலின், அம்பிசிலின் மற்றும் பஞ்சு, பண்டேஜ், துணிவகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன! இது தொடர்பாக சுகாதார அமைச்சுடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் பேச்சு நடாத்த வைத்தியக்குழுவொன்றும் கொழும்பு சென்றுள்ளதும் இங்குகுறிப்பிடத்தக்கது (ப11)

# தரையில் புலிகளை எதிர்த்து நிற்க எமது இராணுவப் பலம் போதாது!

## இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்ஹ கருத்து

விடுதலைப் புலிகளுடன் நிலப்பகுதியில் போரிடக் கூடியளவுபடைப் பலம் இன்னமும் ஸ்ரீலங்கா ராணுவத்திடம் இல்லை என ராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

குடாநாட்டினுள் மோதலில் ஈடுபடுவதற்கு மேலதிகமான துருப்புகள் தேவைப்படுகின்றன. இந்திய ராணுவத்தினர் ஒப்பரேஷன் பவானின் போது ஆறு பட்டாலியன்களை புலிகளுக்கு எதிராக போர்முனையில் ஈடுபடுத்தினர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படையினரை அதிக எண்ணிக்கையில் வைத்திருந்தாலே புலிகள் மறுதாக்குதல்களை நடாத்த முடியாது தடுக்கலாம். அல்லாது விடின் மாவிட்டபுரத்தில் அண்மையில் நடாத்திய திடீர் தாக்குதல் போன்று, ராணுவநகர்வின் பின்னர் புலிகள் எதிர்பாராத தாக்குதல் நடத்தலாம்.

அத்துடன் புலிகள் தற்போது புதியபோர்உத்திகளையும் கையாள்கின்றனர். மன்னார்த்தீவிற்கு இரு ராணுவ பட்டாலியன்களை நடவடிக்

—04ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவபீட அனுமதி அடுத்தவருடம் அதிகரிக்கும்

அடுத்தவருடம் முதல் பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடத்திற்கு அதிகமான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர்.

இதன்பொருட்டு அடுத்த வருடம்மருத்துவபீடங்களுக்கு 800 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர். கடந்த காலங்களில் 520அளவிலான மாணவர்களே மருத்துவக்கல்வியைத் தொடர அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமோனியா என்று மண் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை

நவாலி மேற்கில் உள்ள விவசாயி ஒருவருக்கு 'அமோனியா' உரம் என்று கூறி மண் நிரப்பப்பட்ட உரப் பையை 1000 ரூபாவுக்கு விற்றார் ஒருவர். ஆயிரம் ரூபாவை முற்பணமாகக் கொடுத்த இந்த விவசாயி மிகுதிப் பணத்திற்குப் பின்னர் வருவதாகக் கூறிச் சென்றாராம். அந்த விவசாயி உரப் பையை பின்னர் திறந்து பார்த்தபோது அதனுள் மண் இருப்பதைக் கண்டு திகைத்தார். (ப 11)

## பாதிக்கப்பட்ட பகுதிகளின் ஆசிரியருக்கே சம்பளப்பணம்

கொழும்பிலிருந்துகொண்டு வரப்பட்ட பணத்தில் கல்வித்திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட 3 லட்சம் ரூபா பணம் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பாடசாலை ஆசிரியர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் யாழ் கல்விப்பணிப்பாளரை வேண்டியுள்ளார்.

யாழ் மாவட்டந்தில் உள்ள

—04 ஆம் பக்கம் பார்க்க

## பலாலி, வயாவிளான், குரும்பசிட்டி பகுதிகளில் வீடுகளைத் தகர்த்துவிட்டு மணல் அரண்கள் அமைப்பு

பலாலியைச் சூழவுள்ள இடங்களைப் பாதுகாக்க இராணுவத்தினர் தொடர் மணற்பிட்டியரண் அமைத்து வருகின்றனர்.

பலாலிவடக்கு - வளலாய்ப் பகுதியில் இருந்து புல்டோசரின் உதவியுடன் அமைக்கப்பட்டுவரும் மேற்படி மணலரண்கள் வயாவிளான் மேல் மாடி வீடுவரை தொடர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியை நோக்கி அரண்கள் மேலும் அமைக்கப் படுவதாகவும் அவ்விடங்களுக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு மாகாண அகதிகளுக்கு சுயதொழில் உபகரணங்கள்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து கிழக்கு மாகாண அகதிகளுக்குஎன 3200 குடிசைகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இக்குடிசைபெறுபவர்களுக்கு 750/- ரூபா பெறுமதியான சமையல் பாத்திரமும் 1250/- ரூபா பெறுமதியான விவசாய உபகரணமும், கடற்றொழிலாளருக்கு மீன்பிடி உபகரணமும் வழங்கப்படவுள்ளன. (74)

## இராணுவப் பிடியில் வயோதிபர் நிலை என்னவோ?

பலாலி இராணுவ முகாம் தாக்குதல்களின்போது தோலகட்டியில் சிக்கிக் கொண்ட இரு வயோதிபர்கள் பற்றி இதுவரையும் தகவல்கள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## போராளிகளை ஊக்குவிப்பது தொடர்பாக தமிழ்நாடு அரசிற்கு பிரதமர் சந்திரசேகர் எச்சரிக்கை

தமிழ்நாடு அரசு இலங்கைத் தமிழ்ப்போராளிகளை ஊக்குவிப்பது குறித்து மத்திய அரசு வெறுமனே பார்த்துக்கொண்டிராது என இந்தியப்பிரதமர் சந்திரசேகர் எச்சரித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் சந்திரசேகர் அஸ்ஸாம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இலங்கைப் போராளிகளின் நடமாட்டம் காணப்படுகிறது. இது தொடர்பாக முதலமைச்சர் கருணாநிதியுடன் தாம் தொடர்புகொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

## உரவகைகளை கொண்டுவர தனியாருக்கு அனுமதி

வடபகுதி விவசாயிகளுக்குத் தேவையான பசளை வகைகளை தனியார் வியாபாரிகள் கொழும்பிலிருந்துஎடுத்துவர அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

யூரியா தவிர்ந்த ஏனைய சகல பசளைகளும், விவசாய கிருமிநாசினி மருந்து வகைகளையும் இங்கு எடுத்துவர கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அனுமதியளித்துள்ளதாகக் கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அமெரிக்க நிதியுதவி ஸ்தாபனம் உரவகைகளையும், விதை தானிய வகைகளையும் வடக்கே கொண்டுவந்து விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (66)

## அமெரிக்கா, அவுஸ்திரேலியா தூதரக அதிகாரிகளை அரச அதிபர் சந்தித்தார்

கொழும்பில் தங்கியிருந்த போது யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய தூதரகங்களுக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரிய நியமனம், பதவி உயர்வு தொடர்பாக லஞ்சம் பெறுவதாக சீ. ஐ. டிக்கு புகார்

ஆசிரிய தொழிற் சங்கங்களுடன் தொடர்புடைய சிலர், ஆசிரிய நியமனம், அதிபர்கள் தரத்திற்கான பதவி உயர்வு என்பன தொடர்பாக லஞ்சம் பெறுவதாகக் கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு புகார்கள் வந்துள்ளன.

இது குறித்து ஆசிரியர்கள், அதிபர்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் க. ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

இந்த லஞ்ச மோசடியில் ஈடுபட்டவர்கள் குறித்த விபரங்கள் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும்

—04ஆம் பக்கம் பார்க்க

## தனியாருக்கான மருந்துகள் விங்கோரேடர்ஸில் வருகிறது

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மருந்துக் கடைகளுக்கும், தனியார் ஆஸ்பத்திரிகளுக்கும் தேவையான மருந்து வகைகள் 'விங்கோரேடர்ஸ்' என்ற கப்பலில் வரவுள்ளது.

இதே கப்பலில் யாழ்ப்பாணத்திற்கான தபாற்பொதிகளும் கொண்டுவரப்படவுள்ளன. இக்கப்பல் நாளை இங்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (66)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# அம்புலன்சும் ஊழியரும் உண்டு; ஆனால் மனிதாபிமானம் இல்லை

ஆசிரியர்,
முரசொலி.

கடந்த 15-ம் திகதி பளை பிரசவ ஆஸ்பத்திரியில் கிளாலியைச் சேர்ந்த குகனேஸ்வரி என்ற பெண்மணி பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டு ஒரு குழந்தையை பெற்றெடுத்தார். மறு குழந்தை பல மணித்தியாலங்களாக பிரசவமாகவில்லை. இதனால் அப்பெண் துடிதுடித்துக் கொண்டிருந்தார்.

இப் பெண்ணை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு தனியார் வாகனங்கள் ஆயிரக்கணக்கில் கேட்டதினால் ஏழைக் குடும்பஸ்தரான அப்பெண்ணின் கணவர் மிகவும் அவதிப்பட்டார்

இந் நிலையில் பளை வைத்தியசாலையில் இருந்த புதிய அம்புலன்ஸ் வண்டியை நாடிய போது அதற்கு எரிபொருள் இல்லை என முதலில் கைவிரிக்கப்பட்டது.

பின்னர் 10 லீற்றர் டீசலை குகனேஸ்வரியின் கணவர் வழங்கிய போது வான் தாக்குதல்கள் இடம் பெறுவதால் செல்ல முடியாது என சாரதியும், தாதியர்களும் சாட்டுச் சொல்லி அக்கறையின்றி இருந்தனர்.

இந்த புதிய அம்புலன்ஸ் வண்டி பல நாட்களாக நோயாளர் சேவைக்கு விடப்படாமல் வைத்தியசாலையில் வீணே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் வாகன வசதியற்ற இவ்வேளையில் சுமார் 27 மைல் தூரத்திலுள்ள யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவசர நோயாளர்களை எடுத்து வருவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இது குறித்து யாழ் சுகாதார சேவைப் பணிப்பாளர் உடன் நடவடிக்கையெடுத்து, அப்பாவி நோயாளர்களின் உயிர்களைக் காப்பாற்ற உதவி செய்வாரா?

எஸ். ரவிச்சந்திரன்
முகமாலை

16. 11. 1990

# வேலணை கோட்ட ஆசிரியருக்கு இம்மாதச் சம்பளம் பணமாக

வேலணைக் கோட்டக்கல்விப்பிரிவைச்சேர்ந்த 18 பாடசாலைகளுக்கு இம்மாதச்சம்பளத்தைப் பணமாக வழங்குவதற்கு கோட்டக்கல்வி அதிகாரி சி. புலேந்திரன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பருத்தித்துறை வந்துள்ள கப்பலில் இருந்து சுமார் 5 லட்சம் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊர்காவற்றுறையில் 12 பாடசாலைகளும், மண்டதீவில் 3 பாடசாலைகளும் புங்குடுதீவில்3 பாடசாலைகளுமாக மொத்தம் 18 பாடசாலைகளுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படும். (ப. 17)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டியும், நன்றி நவிலலும்

18 - 11 - 1990-ல் நடைபெறும்

| வீர ஜனனம் | | வீர மரணம் |
|---|---|---|
| 08 |  | 19 |
| \| | | \| |
| 06 | | 10 |
| \| | | \| |
| 1965 | | 1990 |

வீரவேங்கை

### வேலும்மயிலும் குணசீலன்(சதீஸ்)

அன்பு நிறைந்தவனே - குடும்பத்தில்
ஆசைநிறைந்தவனே - ஈழவிடுதலையில்
பண்பு நிறைந்தவனே - நல்லோர்களில்
படை நடுங்க போர் புரிந்தவனே-எதிரிகள் மத்தியில்,

பொழுது விடிவது - நிச்சயம்
பொங்கிடும் கடல் அலை சொல்வது சத்தியம்
கதிர்மணி விளைவது - இலட்சியம்
களப்புலி வெல்வதும் - இவ்வகைதான்.

தக்க சமயத்தில் உதவிய எல்லோருக்கும் நன்றி.

வாழ்க தமிழ் மலர்க தமிழீழம்

— உறவினர்.

11091

கடந்த வியாழன் முதல் பலாலியிலிருந்து

# வடமராட்சிப் பகுதியை நோக்கி கடும் ஆட்லறிஷெல் தாக்குதல்

கடந்த வியாழக்கிழமை முதல் பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிப் பகுதியை நோக்கி அடிக்கடி ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக ஏவப்படும் இந்த ஷெல்கள் கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை, நவுண்டி, சக்களாவத்தை, உப்புக்கிணற்றடிப் பகுதிகளில் வந்து விழுந்து வெடித்துச் சிதறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெய்வாதீனமாக இத்தாக்குதல்களால் இதுவரை உயிரிழப்புக்கள் ஏற்படாத போதிலும் உப்புக்கிணற்றடிப் பகுதியில் எஸ். வேலுப்பிள்ளை என்பவரது வீடும், மற்றும் சில வீடுகளும் பெரும் சேதமடைந்துள்ளன. (39)

## உப்பளஊழியருக்கு வேதனம் வழங்க நடவடிக்கை

வடபிராந்திய உப்பளங்களில் கடமை புரியும் ஊழியர்களுக்கு ஜூலை மாதம் முதல் வழங்கப்படாமலிருக்கும் வேதனத்தைக் கொழும்பிலிருந்து பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய உதவி உற்பத்தி முகாமையாளர் மா. ஜே. த. மனோகரன் தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு தலைமைக் காரியாலய அதிகாரிகளுடன் கலந்துரையாடவென வடபிராந்திய முகாமையாளர் செ. வேலாயுதபிள்ளை கொழும்பு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

UNIVERSITY
OF
JAFFNA

**Faculty of Agriculture**
**Kilinochchi**

Applications will be recevied by me from suitable candidates for the following post up to 1990.11.27.

Temp Demonstrator in Animal Science.

**Salary Scale:**

Temp. Demonstrator:
3,250/- p.m. (fixed)

**Qualifications:**

TEMPORARY DEMONSTRATOR:

A graduate or person awaiting results of a Final / Degree Examination.

Applicants are requested to apply together with their Bio-datas. Qualified applicants are also requested to present for an interview scheduled to be held on 1990 . 11 . 28 at 10 . 00 a.m. in the Board Room of this University.

REGISTRAR

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1990 . 11 . 15.

11093

## மனநோயாளர்களுக்குரிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் 34 மன நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோயாளிகளுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் வாகற்றில், ஸ்ரெலசின், ஆற்ரேன் போன்ற மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

## பிரியாவிடை அழைப்பு

பண்டத்தரிப்புக் கோட்டத்துக்குப் பொறுப்பாகப் புதிதாக நியமனம் பெற்றுள்ள பிரதம கல்வி அதிகாரி ப. சண்முகராசாவை வரவேற்கும் பொருட்டும், யாழ் கல்வித் திணைக்களத்துக்குப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் முன்னாள் பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதம கல்வி அதிகாரி இ. சிவானந்தன் அவர்களுக்குப் பிரியாவிடையளிக்கும் பொருட்டும் பண்டத்தரிப்புக் கோட்டத்தைச் சேர்ந்த சகல கொத்தணி அதிபர்களையும், கல்வி அதிகாரிகளையும், நிர்வாக அதிகாரிகளையும், ஊழியர்களையும் 19 ம் திகதி திங்கள் காலை 10 மணிக்குப் பணிமனைக்கு வருகை தருமாறு பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டச் செயலாளரும், காங்கேசன்துறைக் கொத்தணி அதிபருமான க. இராசதுரை வேண்டியுள்ளார். (32)

## பூநகரியில் மாவீரர் கலையரங்கம்

எதிர்வரும் 27-ம் திகதி பூநகரி பள்ளமடுப் பிரதேசமான முழங்காவிலில், 54 அடி நீளம் கொண்ட கலையரங்கம் இறந்த மாவீரர் நினைவாகத் திறக்கப்படவுள்ளது.

பூநகரிப் பள்ளமடுப் பிரதேசமெங்கும் மாவீரர் தின ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.


## சிறு விளம்பரம்

சேவை

மீண்டும் றோணியோ, தமிழ், ஆங்கில தட்டச்சு சகல அச்சுவேலைகளும் நவீன முறையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் 138, நாவலர் றோட்(மனோஹராசந்தி) யாழ்ப்பாணம். 11033


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 |  | 19 |
| — | | — |
| 03 | | 10 |
| — | | — |
| 1940 | | 1990 |

அமரர்

### நாகரெட்ணம் செல்வரெட்ணம் (றகுபதி)

அன்பின் உருவாய் அவனியில் வாழ்ந்தவர்
ஆலவிருட்சமாய் நிழல்தந்திருந்தவர்
இறைவியின் பாதம் நிதமும் நினைத்தவர்
ஈதல் தன்னைக் கடனாய்க் கொண்டவர்
உத்தமராகவே என்றும் வாழ்ந்தவர்
ஊருக்காகவே நிதமும் உழைத்தவர்
எங்களுக்காகவே தன்னைத் தந்தவர்
ஏற்றமுடனே வாழ்ந்திடச் செய்தவர்
ஐங்கரன் கோவிலை நாளும் துதித்தவர்
ஒற்றுமை தன்னை ஓங்கிடச் செய்தவர்
ஓங்கு புகழுடன் வாழ்ந்து மகிழ்ந்தவர்
ஔவியம் தன்னை அறவே மறந்தவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய, நயினை நாகபூசணியைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்

157, பகுதி I, விஸ்வமடு,
முல்லைத்தீவு.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

11085

# ஐம்பது வயதிலும் கர்ப்பம் தரிக்கலாம்!

மாதவிடாய் நின்றுபோன பெண்கள்கூட கர்ப்பந் தரிக்க முடியும் என தென் கலிபோர்ணிய பல்கலைக்கழக ஆய்வாளர் மார்க்சோ அர் செய்த பரிசோதனைகள் தெரிவிக்கின்றன.

குழந்தை பெறும் வாய்ப்பே இல்லாது வயதில் மூத்த பெண்களுக்கு இது தித்திப்பான செய்தி.

மாதவிடாய் நின்ற ஏழு பெண்களில் ஐவர் - இப்பரிசோதனையால் - ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான முட்டைகள் வயது குறைந்த பெண்களிடமிருந்து பெறப்பட்டன. அவை ஆய்வு கூடத்தில் கருக்கட்டல் செய்யப்பட்டு பிறகு கருப்பைக்குள் வைக்கப்பட்டன.

இதுவரை இத்தகைய பரிசோதனைகள் இளம் பெண்கள் மீதே செய்யப்பட்டு வந்தன. வயது முதிர்ந்த பெண்களால் கருவைச் சுமக்கமுடியாதென்று மருத்துவர் கருதினர்.

ஆனால் இப்பொழுதோ ஹோர்மோன்களில் துணைகொண்டு மாதவிலக்கு திரும்பத் தூண்டப்படுகிறது.

பொருட்களைக் கொள்ளையடித்துவிட்டு கப்பம் கேட்கிறார்களாம்

# முஸ்லிம் காடையர்களால் யாழ் லொறிகள் கடத்தல்!

வவுனியாவுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் முஸ்லிம் காடையர்களின் அட்டகாசம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிலதினங்களுக்கு முன்னர் சுன்னாகத்திலுள்ள நிறுவனமொன்றிற்குச் சொந்தமான லொறியொன்றைத் தடைபோட்டு மறித்த முஸ்லிம் காடையர்கள் அதனை கண்டிக்குக் கடத்திச்சென்றனராம்.

அங்கு வைத்து லொறியிலிருந்த ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களையும், ஐம்பதினாயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்த பின்னர் லொறியை திருப்பித் தருவதற்கு மேலும் பணம் தருமாறு கோரியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இந்த லொறி கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தென்பகுதியில் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டு அவர்களின் பாவனையின்பின் அண்மையில் திருப்பி வழங்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே போன்று மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான லொறியொன்றும் வவுனியாவில் வைத்து கப்பம் கோரி முஸ்லிம் காடையர்களால் கடத்தப்பட்டுள்ளதாத் தெரிவிக்கப்படுகின்றது. (ப-2)

# மாகாண இடமாற்ற சபை 3-ம் திகதி திருமலையில் கூடுகிறது

வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் கடமையாற்றும் இணைந்த சேவைகளைச் சேர்ந்த ஊழியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக ஆராய்வதற்கு இடமாற்றசபை வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் டிசம்பர் மாதம் 3-ம் திகதி மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் கூட உள்ளது.

வடகிழக்கு மாகாணங்களில் கல்வித்திணைக்களங்களில் கடமையாற்றும் இணைந்த சேவையைச் சேர்ந்த ஊழியர்களில் இவ்வருடம் டிசம்பர் 31-ம் திகதியில் ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களின் விபரம் இவ் இடமாற்றம் சம்பந்தமாக அண்மையில் கோரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ் இடமாற்ற சபையின் வட கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர், மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பங்குபற்றுகிறார்கள். (ப17)

# பூநகரிப் பகுதி வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள்

பூநகரிப் பகுதியில் மாவீரர்களின் பெயர்கள் வீதிகளுக்குச் சூடப்படவுள்ளன,

பள்ளிக்குடா சிற்றூர் அவையில் 4ஆம கட்டை முதலாம் ஒழுங்கைக்கு வீரவேங்கை விசுவன் பெயரும், பள்ளிக்குடா வீதிக்கு கபடன் தனபாலின் பெயரும், 4ஆம் கட்டை 3ஆம் ஒழுங்கைக்குக் கஸ்ரோவின் பெயரும் செம்மன் குன்று பல்லாய் வீதிக்கு அன்னக்கிளியின் பெயரும் சூட்டப்பட உள்ளன.

பூநகரி பள்ளமடு பிரதேசமெங்கும் மாவீரர்களின் உருவப்படங்கள் வீதியெங்கும் அமைக்கப்பட்டுள்ளன.

# வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு தனித்தனி டி. ஐ. ஜி. அலுவலகம்

வட-கிழக்கு மாகாணங்களைத் தற்காலிகமாக ஒன்றிணைந்ததும், ஆரம்பிக்கப்பட்ட வட-கிழக்கு மாகாண பொலிஸ் டி.ஐ ஜி அலுவலகம் இதுவரை திருகோணமலையில் இயங்கி வந்தது

இதை தற்சமயம் மூடிவிட்டு வவுனியாவில் வடபகுதிக்கான டி ஐ ஜி அலுவலகமும் மட்டக்களப்பில கிழக்குப் பகுதிக்கான அலுவலகமும் திறக்கப்பட்டுள்ளன.

இரு மாகாணங்களையும் ஒரு டி. ஐ. ஜி இதுவரை நிர்வகித்தலை தற்சமயம் இருவர் நிர்வகிக்கின்றனர். இதைவிடக் கொழும்பில் இன்னொரு டி.ஐ.ஜி அலுவலகமும் இயங்குவதாக அறிய முடிகிறது. அதற்கு வட-கிழக்கு மாகாண டி.ஐ.ஜி அலுவலகம் என பெயரிடப்பட்டுள்ளதாம்.

அரசின் தற்காலிக இணைப்பும், பின்னர் இணைப்பை தற்சமயம் விரும்பாத தன்மையையும் காட்டவே இச்செயல் காட்டுவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

அத்துடன் வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தற்சமயம் கண்டி வீதியிலுள்ள புத்தவிகாரைக்கு அருகாமையில் இயங்கி வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (ப-1)

# உரத்தட்டுப்பாட்டின் எதிரொலி; இயற்கை உற்பத்திக்கு மவுசு

இங்குள்ள தோட்டங்களுக்கு மீண்டும் இயற்கைப்பசளைகள் கூடுதலாக பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

அண்மையில் பெய்த மழையோடு பல தோட்டங்கள் பண்படுத்தப் படுவதையும் அவற்றிற்கு இலை குழைகள் இடப்படுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

அத்தோடு எரு, உமிச்சாம்பல் என்பனவும் பசளையாகப் பாவிப்பதற்கு தோட்டங்களுக்குள் குவியல்களாக வைக்கப்பட்டிருக்கின்றன உரத்திற்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டையடுத்தே இவை தற்போது மீளவும் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றன. (ப-10)

# திருமலை அகதிகளுக்கு வடம. கிழக்கில் 100 வீடுகள்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வடமராட்சி கிழக்கில் தங்கியிருக்கும் திருமலை அகதிகளுக்கு 1,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டு 100 வீடுகள் முதற்கட்டமாக அமைக்கப்பட்டு குறிப்பிட்ட அகதிகளுக்குச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் கையளிக்கப்பட்டது.

இந்த ஒவ்வொரு வீடும் 3,000 ரூபா பெறுமதி கொண்டவையாகும். (43)

# மேல் நீதிமன்ற நீதியரசராக நியமனம்

யாழ் மாவட்ட நீதிபதி பொன்னுச்சாமி பாலவடிவேல் மேல் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதில் நீதியரசர் எஸ். டி. தம்பையா முன்னிலையில் இவர் மேல் நீதிமன்ற நீதியரசராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

1980-ம் ஆண்டு முதல் மாவட்டநீதிபதியாகக் கடமையாற்றிய இவர் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் கடமையாற்றியுள்ளார்.

மாவட்ட நீதிபதியாகப் பதவி ஏற்கும்முன் இவர் 20 வருடங்கள் யாழ் நீதிமன்ற வழக்கறிஞராகக் கடமையாற்றியுள்ளார். இவர் வல்வெட்டித்துறைச் சிவகுரு வித்தியாசாலை, சிதம்பரக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (20)

## முறைசாரா பயிற்சி வகுப்புக்கள்

முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் தோற்பொருள் உற்பத்தி, தையல் பாடநெறிகளைக் கற்கும் மாணவர்கள் இன்று 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குச் சமுகமளிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது

அச்சுவேலி ம. வி. யில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற உடையமைத்தல், ஹோட்டல் முகாமைத்துவம் பாடநெறிகள் புத்தூர் சோமாஸ்கந்தக்கல்லூரிக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. பயிற்சி மாணவர்கள் இன்று 18-ம் திகதி காலை 9 மணிக்குச் சமுகம் கொடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி ம. வி. யில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் தொழிற்திறன் பயிற்சி பெற்ற மாணவர்களைப் போதனாசிரியர் திருமதி இ. சண்முகரெத்தினம் சந்தித்து அவர்களுக்கான தொழில் வாய்ப்புகள் பற்றிக் கலந்துரையாடவுள்ளார். எல்லா மாணவர்களையும் பங்குபற்றுமாறு தொழில்நுட்பக் கல்வியதிகாரி ச. சுப்பிரமணியம் கேட்டுள்ளார். (74)

## இன்று சிரமதானம்

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை சிரமதான வேலைகள்செய்ய உத்தேசித்திருப்பதால் அபிவிருத்திச்சங்க முகாமை உறுப்பினர்களை காலை 9 மணிக்கு சமுகம் கொடுக்கும்படி செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வலதுகாலை எடுத்துவைத்து வா! வா!! வா!!!

# ஜொனி பொறிவெடியால் வலக்காலுக்குப் பலத்த கிராக்கி

வடக்கிலுள்ள செயற்கைக்கால் பொருத்தும் சுண்டுக்குளி ஜெயப்பூர் தொழிலகத்தில் தற்பொழுது செயற்கை வலதுகாலுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

கொழும்பிலுள்ள தாய்ச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு வலக்காலை அனுப்பும்படி கேட்டபொழுது கையிருப்பு இல்லையென அது கைவிரிக்கிறதாம்.

கொழும்பு இராணுவத் தலைமை அலுவலகம் குறிப்பிட்ட தாய்ச்சங்கத்திடம் இருந்து தயாராகும் வலக்கால்கள் முழுவதையும் தாமே உடனுக்குடன் கொள்வனவு செய்து வருவதே இந்த நிலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது,

வடக்குக் கிழக்கில் விடுதலைப்புலிகளின் பொறி கலங்கும் ஜொனி பொறிவெடிகளால் இராணுவத்தினரின் வலக்கால்களே அதிகளவில் துண்டிக்கப்படுகிறதாம்.

மேலிடத்தின் முன்னேறிப் ''போ, போ'' என்ற உத்தரவால் முன்னேற முனையும் இச்சிப்பாய்கள் மறைந்துகிடக்கும் ஜொனி வெடிகளின் ''வா,வா'' என்ற அழைப்பால் தமது வலக்காலை இழந்துவிடுகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (74)

# கொம்படிவெட்டைப் பாதையில் பயணிகள் தொகை அதிகரிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கொம்படிவெட்டைப் பாதையால் பிரயாணம் செய்யும் பயணிகள் வியாபாரிகள் தொகை கடந்த இரண்டொரு நாட்களில் வெகுவாக அதிகரித்துள்ளன.

கொம்படிவெட்டைக் கடலோரப் பகுதியில் மழை பெய்து நீர் நிரம்பியதைத் தொடர்ந்து இக்கரையிலிருந்து அக்கரைக்கு பிரயாணிகள் வியாபாரிகள் ஆகியோரை ஏற்றி இறக்குவதில் எழுபதுக்கும் மேற்பட்ட பிளாஸ்டிக் வள்ளங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பிரயாணி ஒருவருக்கு ரூபா 25ம், சைக்கிள் வண்டிக்கு ரூபா 30ம், ஒரு மூடைக்கு ரூபா 30ம், கட்டணமாக அறவிடப்படுகிறது. லொறிகளில் இருந்து பொருட்கள் அக்கரையிலிருந்து இக்கரைக்கு மாற்றும் வேலையும் நடைபெறுகிறது.

வடமராட்சி கிழக்கு வட்ட அவையின் மேற்பார்வையின் கீழ் போக்கறப்பு சிற்றூர் அவையினர் பிரயாண ஒழுங்குகளை கவனித்து வருகின்றனர். (18)


# யாழ்ப்பாணக் கல்லூரி புதிய மாணவர் அனுமதி-1991

பின்வரும் வகுப்புக்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

முதலாம் வருடம்:- 01-02-85க்கும் 31-01-86க்கு மிடைப்பட்ட காலத்திற் பிறந்த பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்.

ஆறாம் வருடம்:- 01-02-80 க்கும் 31-01-81 க்கு மிடைப்பட்ட காலத்திற் பிறந்த பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்.

பதினோராம் வருடம்:- க. பொ. த. (சா. த) பரீட்சையில் சிறந்த தகைமைகள் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆற்றல் மிகுந்த மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு:- 20-12-90**

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்திற் பெறலாம்,

விண்ணப்பக் கட்டணம்: ரூபா 50.

அதிபர்.

11090

### வடக்கு, கிழக்கில் பணிபுரியும்

## சிங்கள முஸ்லிம் ஆசிரியர் பற்றி விபரங்கள் அமைச்சால் சேகரிப்பு

வடக்கிலும், கிழக்கிலும் கடமைபுரியும் சிங்கள, முஸ்லிம், தமிழ் ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை உயர் கல்வி அமைச்சுக் கோரியுள்ளது.

அத்துடன் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 31-ம் திகதி சிங்கள, முஸ்லிம், தமிழ் பாடசாலைகளில் நடனம், மனையியல், விவசாயம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு இருந்த வெற்றிடங்கள் பற்றிய விபரங்களையும் உயர்கல்வி அமைச்சு கல்விப் பணிப்பாளர்களிடம் கோரியுள்ளது.

பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வியொன்று தொடர்பாகவே இந்த விபரங்கள் சேகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப 17)

## பாடசாலைக் காணிகளில் அத்துமீறிக் குடியேற்றம்

அக்கராயன் பாடசாலையின் 60 ஏக்கர் கொண்ட காணியில் சிலர் அத்துமீறி குடியேறிவருவதாக' அதிபர் புகார் தெரிவித்துள்ளார்.

இதேபோல கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலய அதிபரின் விடுதியிலும் சிலர் அனுமதியின்றி தங்கியுள்ளதாகவும்; சிலர் இப்பாடசாலைக் காணியில் அத்துமீறி இருப்பதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன (ப-6)

## வலி. வடக்கில் 3 மாதங்கள் தொடர்ச்சியாக ஊரடங்கு

கடந்த ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி முதல் இன்று வரை தொடர்ச்சியாக கால வரையறையற்ற முறையில் வலிகாமம் வடக்குப் பகுதியில் போடப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் அப்பகுதி மக்கள் பெரும் அவல நிலைக்குள் அகப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு உத்தரவு அமுலிலுள்ள பகுதிகளில் உள்ள அரச அலுவலகங்களின் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய கடமைகள் சட்டப்படி இயங்க முடியாதுள்ளதால் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கிராம சேவை அலுவலர்களின் அலுவலகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பாடசாலைகள் என்பன தமது முழுக்கடமையினையும் ஆற்ற முடியாது மட்டுப்படுத்தப்பட்ட முறையில் செயற்பட்டு வருகின்றன.

இப்பணிமனைகளில் கடமை புரியும் அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ள இடருதவிப் பணம் வழங்க முடியாத சட்டரீதியான பிரச்சினையும் உருவாகியுள்ளது.

மூன்று மாதங்களுக்குத் தொடர்ச்சியாகத் தொடரும் ஊரடங்கு உத்தரவு இலங்கையின் எப்பகுதியிலும் வலிகாமம் வடக்குப் பகுதியைப் போல அமுற்படுத்தப்பட்டது கிடையாது என்பதும் குறிப்பிடக் கூடியது. (32)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## 26 கிராமங்களுக்கு மட்டுமே 2ஆம் கட்ட நிவாரணம்

கிளிநொச்சி மாவட்டத்தில் சில பகுதிகளுக்கே இரண்டாம் கட்ட இலவச உணவு விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது என கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

உணவுப்பொருட்கள் போதியளவு கையிருப்பில் இல்லாததால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கே இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கவேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து போதியளவு உணவுப் பொருட்களை கப்பல்மூலம் முல்லைத்தீவுக்கு தருவிப்பது குறித்து அவர் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

கிளிநொச்சி உதவி அரச அதிபர் பிரிவில் 20 கிராமங்களுக்கும், கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் ஆறு கிராமங்களுமே கடுமையான பாதிக்கப்பட்ட கிராமங்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 6)

### வீடுகளைத் ..

கண்லமயில் தமது வீடுகளுக்குச் சென்றுவந்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மாவிட்டபுரம், வீமன்காமம், கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளிலும் இவ்வகை அரண்கள் அமைக்கப்படுவதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு அரண்கள் அமைக்கப்படுகின்றபோது அவர்களுக்குத் தடையாகவுள்ள வீடுகள், வீதிகள், கடைகள், கட்டிடங்கள் சகலதும் தகர்க்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய நடவடிக்கையால் இதுவரை சுமார் இருநூற்றுக்கும் அதிகமான வீடுகள் இப்பகுதிகளில் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும், தெரியவருகிறது. (32)

### தூதரக...

கும் சென்றிருந்தார்.

யாழ்ப்பாண நிலைமைகள் குறித்து தூதரக அதிகாரிகளுக்கு அவர் விபரமாக எடுத்துக் கூறினார். (66)

### பாதிக்கப்பட்ட...

சகல ஆசிரியர்களுக்கும் சம்பளம் வழங்க இப்பணம் போதமையினாலேயே இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது. (32)

### ஆசிரிய...

தெரிவித்தார்.

இடமாற்றம், பதவியுயர்வு பற்றிய பிரச்சினைகள் உள்ள ஆசிரியர்கள் புதன், வியாழன் ஆகிய தினங்களில் கல்விச் சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் தம்மை, சந்திக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

### யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு

# நான்கு வார இலவச நிவாரணம் சகலருக்கும் கிடைக்கும்

யாழ் மாவட்டத்தில் உள்ள 1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோர் உட்பட அனைவருக்கும் நான்கு கிழமைகளுக்குரிய இவவச உணவுப் பொருள்கள் வழங்க ஜனாதிபதி விசேட அனுமதியளித்துள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் திரு .அன்ரன் அல்பிறட் தெரிவித்துள்ளார். இது கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் அமுல் செய்யப்படவுள்ளது.

யாழ் மாவட்ட மக்களினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் வேண்டுகோளுக்கு இணங்க யாழ் மாவட்டத்தின் அவசிய தேவைகள் குறித்து ஜனாதிபதி, நிதியமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் மற்றும் அமைச்சுக்களின் உயர் மட்ட அதிகாரிகளையும் கொழும்பில் சந்தித்துப் பேசிய பின்னர் நேற்றுச் செயலகத்தில் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திற்கு மாதமொன்றிற்கு 5 கோடி ரூபா பணம் அரசினால் அனுப்பிவைக்கப்படும் எனவும் இதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துள்ளதாகவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை உயர்வு அரச ஊழியர் மற்றும் வருமானம் இழந்துள்ள சகல தரப்பினரதும் நிலைமைகள் குறித்து ஜனாதிபதிக்கு விபரமாக எடுத்துக் கூறப்பட்டதையடுத்து இலவச நிவாரணம் பற்றிய இப்பணிப்புரை விடுக்கப்பட்டது.

தற்போது குமண கப்பல் மூலம் வந்த 3 கோடியே 10 லட்சம் ரூபா பணம் யாழ் மாவட்டத்தில் உள்ள பல்வேறு திணைக்களங்களுக்கும் இலங்கை வங்கிக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

இப்பணத்தில் இருந்து ஓய்வூதியம் பெறுவோருக்கும், ஒதுக்கப்படும்.

ஜனசக்தித் திட்டம் வடக்கு கிழக்கில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள போதிலும் இதனைத் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசாங்க அதிபர் தெரிவித்தார். (66)

### திங்கள் முதல் பணம் வழங்கப்படும்

இலங்கை வங்கிக்கென கப்பலில் கொண்டுவரப்பட்ட இரண்டரைக் கோடி ரூபாவும் திங்கட்கிழமைமுதல் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவின் போது ஓய்வூதியக் காசோலைகள், சம்பளக்காசோலைகள் என்பன முன்னுரிமை கொடுத்து வழங்கப்படுமென இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

### வீரமரணம்

நேற்றுப் பகல் 12 மணியளவில் வயாவிளான் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் றோம் (தர்மராசா, றோய், சங்கானை) வீரமரணம் அடைந்தார். (71)

### வயோதிபர்...

இல்லாததால் உறவினர்கள் கவலையடைந்துள்ளனர்.

தோலகட்டி திக்கப்பிராயைச் சேர்ந்த இராமலிங்கம் ஆச்சிமுத்து (வயது 75) என்னும் வயோதிப மாதும், குருசுத்தோட்டத்தைச் சேர்ந்த ஆரோக்கியம் மிக்கேல் உடையார் (வயது 84) என்னும் வயோதிபருமே காணாமற்போனவர்களாவர். (36)

### தரையில்...

கையில் ஈடுபடச்செய்தபோது எதிர்பார்த்ததைப் போன்று எந்தவொரு பாரியமோதலும் நடைபெறவில்லை எனவும் தளபதி ஹிமில்டன் வனசிங்க தெரிவித்தார்.

இதேவேளை ஸ்ரீலங்கா ராணுவத்தின் பலத்தை 100, 000 ஆக அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் வருவது குறிப்பிடத்தக்கது.

எனினும் தற்போதைய நிலையில் குடாநாட்டு ராணுவ நடவடிக்கைகளுக்கு வன்னியில் உள்ளபடைப்பிரிவுகளையே கொண்டுவர முடியும் என ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே தற்போது ராணுவ வைத்தியப்பிரிவிற்கும் ஆட்சேர்ப்பு துரிதகதியில் நடைபெற்றுவருகிறது. காயமடையும் சிப்பாய்கள் தொகை தற்போது முன்னரைவிட அதிகரிப்பதால் வைத்தியசேவையையும் விரிவுபடுத்தவேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

## அடிக்கடி இடம்பெயரும் வயாவிளான் தபாலகம்

வயாவிளான் தபாற்கந்தோர் தற்போது உரும்பராயில் இயங்குகிறது. கடந்த ஜூன் 15 ஆம் திகதிவரை வயாவிளான் சந்தியில் இயங்கிவந்த இத்தபாலகம் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து அச்சுவேலித் தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

அச்சுவேலியில் பொம்மர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் அச்சுவேலி தெற்கில் ஒரு தனியார் வீட்டில் இயங்கி வந்தது.

பின்னர் தபாலதிபரின் ஊராகிய புன்னாலைக்கட்டுவனுக்கு மாற்றப்பட்டது. இராணுவம் வயாவிளான் சென்றதையடுத்து புன்னாலைக்கட்டுவனில் இருந்து உரும்பராய்க்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இத்தபாலகத்தைச் சேர்ந்த பகுதி மக்கள் அதிகமான அளவில் ஆவரங்கால், புத்தூர், மட்டுவில், சாவகச்சேரி, நீர்வேலி, கோப்பாய்ப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளமையால் தபாலகத்தை புத்தூர், ஆவரங்கால் பகுதியிலோ அல்லது சிறுப்பிட்டிப் பகுதியிலோ இயக்கித் தமக்கு உதவும் படியும், வேண்டுமானால் தபாலகத்துக்காக வீடும் எடுத்துக் கொடுக்கத் தாம் தயாராக உள்ளதாகவும் எழுத்து மூலம் யாழ் மாவட்டத் தபால் அத்தியட்சகரை வயாவிளான் மக்கள் வேண்டியுள்ளனர். (32)

### பிரட்மன் வீரக்கோன் தகவல்

## தொடர்பு சாதன சுதந்திரம் புதிய சட்டமூலம் அமுலாகும்

செய்திப்பத்திரிகைகள், மற்றும் வானொலி, தொலைக்காட்சிகளுக்கு கூடியளவு சுதந்திரம வழங்கக்கூடிய வகையில் புதிய சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

இத்தகவலை வெளியிட்ட ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் இந்த சுதந்திரத்தை தொடர்பு சாதனங்கள் துஷ்பிரயோகம் செய்துவிடக் கூடாது என அறிவுறுத்தியுள்ளார்.

எனினும் இந்தப்புதியசட்டமூலம் பத்திரிகைகளின் சுதந்திரத்தை கணிசமான அளவு பறிப்பதாக அமைந்துவிடலாம் எனக் கொழும்பு பத்திரிகைகள் அச்சம் தெரிவித்துள்ளன.

## வேங்கையின் விடுதலைவேதங்கள்

விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவின் இரண்டாவது வெளியீடான 'வேங்கையின் விடுதலை வேதங்கள்' எனும் பாடல் ஒலிப்பதிவு நாடா வெளிவந்துள்ளது.

தமிழீழக்கலைஞர்களின்ஒருங்கிணைந்த முயற்சியில் உருவான இந்த ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு விழா எதிர் வரும் 20-ம் திகதி செவ்வாய்க்கிழமை உரும்பராயில் நடைபெறவுள்ளது.

ஈழத்தின் தலை சிறந்த கலைஞர்களும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (71)

### கலை நிகழ்ச்சி; அனுமதிபெற வேண்டுகோள்

மாவீரர் நினைவு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் தயாரிக்கப்படும் சகல கலை நிகழ்ச்சிகளும் நாளை 19-ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக தென்மராட்சி கலை, காலசார அவைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, முன்கூட்டியே அனுமதி பெறப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதிபெறப்படாத எந்தவொரு நிகழ்ச்சியும் மேடையேற்ற அனுமதிக்கப்படமாட்டாது என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி கலை கலாசார அவையினர் அறிவித்துள்ளனர்.

### அச்சுவேலியில் கூட்டுறவாளருக்கு போட்டி

மாவீரர் தினத்தை முன்னிட்டு அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தமது கிளைகளுக்கிடையே ''சிறந்த கிளைகளை'' தெரிவு செய்வதற்காக போட்டி ஒன்றை நடாத்துகிறது. (ப-24)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 18-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது'